1968 மார்ச் 30] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

இராமேஸ்வரம் நகரியத்திற்கு மானியம்

புயலாலும், வெள்ளத்தாலும் நீர் அதிகம் வரப்பெற்ற தாவைக் கால்வாயிலிருந்து நீரை வெளியகற்றும் பொருட்டு, இராமேஸ்வரம் நகரியத்திற்கு ரூ. 3,000 மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) அண்ணாமலைப் பல்கலைக்கழக விடுதித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

திரு. ஆ. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொது முக்கியம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக உணவு விடுதிகளில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் சுமார் 300 பேர்கள், பஞ்சப்படி கொடுக்கவில்லை என்ற காரணத்தால் வேலைநிறுத்தம் செய்திருப்பது."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாணவர் விடுதிகளில் தற்போது 280 பணியாளர்கள் உள்ளனர். அவர்களது சம்பள விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. தலைமைச் சமையற்காரர் ரூ. 60–1–70
2. உதவிச் சமையற்காரர் ரூ. 50–1–60
3. பரிமாறுபவர் (முதுநிலை) ரூ. 44–1–48
4. பரிமாறுபவர்கள் (இளநிலை) ரூ. 37—1—42
5. குப்பை கூட்டுபவர் ரூ. 40–1–45
6. சுத்தம் செய்பவர் ரூ. 40–1–45
7. தோட்டி ரூ. 45–1–50

1—7—1967 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 வீதம் அவர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்படுகிறது. அதாவது 1—7—1967 முதற்கொண்டு செயலுக்கு வரும் வகையில் 1967 செப்டம்பரில் அகவிலைப்படி வீதம் மாற்றி அமைக்கப்பட்டது. 1—7—1967-க்கு முன்பு வெவ்வேறு வீதங்களில் அவர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட்டது. பணியாளர் செலவுகளுக்கென மாணவர்கள் கொடுக்கும் தொகையிலிருந்து இப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது. அவர்களது சம்பளம் முழுவதும் மாணவர் விடுதி நிதிகளிலிருந்து சரிக்கட்டப்படுகின்றது. தற்போது மாணவர்கள் திங்கள் ஒன்றுக்குப் பணியாளர் செலவுகளுக்கென ரூ. 11-50 வழங்குகின்றனர். ஓராண்டில் 10 திங்கள்களுக்கு இத்தொகை வழங்கப்படுகின்றது. மாணவர்கள் விடுதிகளுக்கென பல்கலைக்கழகம் எந்தத் தொகையையும் வழங்குவதில்லை.

1968 மார்ச் 30] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல்கலைக் கழக அலுவலகத்தில் கல்வித் துறைகளிலும் பட்டறைகள் முதலியவற்றிலுமுள்ள பணியாளர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 47 வீதம் அகவிலைப்படி வழங்கப்படுகின்றது. அதாவது ரூ. 90-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் பெறுபவர்களுக்கு அத்தகைய அகவிலைப்படி வழங்கப்படுகின்றது. இந்த விடுதிகளில் எந்த உணவையும் பெற இப் பணியாளர்களுக்கு உரிமை இல்லை. பல்கலைக் கழக நிதிகளிலிருந்து அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிற பணியாளர்களுக்கு வழங்கப்படும் அதே வீதத்தில் தமக்கு அகவிலைப்படி வழங்கப்படவேண்டுமென்று மாணவர் விடுதிகளில் உள்ள பணியாளர்கள் அதிகாரிகளுக்கு அறிவிப்புக் கொடுத்தனர். இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு விடுதிகளில் அதே நிலைகளிலுள்ள பணியாளர்கள் பெறும் ஊதியங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில், அண்ணாமலைப் பல்கலைக் கழக விடுதிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியங்களே மிக அதிகமானவை. இப்பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன. அவர்களது குழந்தைகட்கு இலவசக் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. பல்கலைக் கழகப் பணியில் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. மாணவர்கள் செலுத்தும் தொகைகளிலிருந்தே அவர்களது ஊதியம் வழங்கப்படுவதால், அரசாங்கம் வழங்கும் மானியங்கள் அவர்களுக்குப் பொருந்தாது. துணை வேந்தர் பல்கலைக் கழகத்தின் வெவ்வேறு பாடத்துறைத் தலைவர்களுடன் (Deans of Faculties) மாணவர் விடுதிப் பொறுப்பாளர்களுடனும் பணியாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, தற்போதைய அகவிலைப்படி வீதத்தைப் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோன்று திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 லிருந்து ரூ. 47 ஆக உயர்த்துவதன் மூலம் ஏற்படுகின்ற கூடுதல் செலவை ஈடு செய்வதற்கு தேவையான வசதியைப் பெறுவது பல்கலைக் கழகத்திற்கு இயலாது என்று விளக்கினர். மேலும், மாணவர்கள் தற்போது பணியாளர் செலவுகளுக்குச் செலுத்தும் தொகைக்கு மேல் அவர்கள் செலுத்துவதென்பது இயலாது என்றும் விளக்கிக் கூறினர். இம் மாநிலத்தில் பிற விடுதிகளில் வேலையிலுள்ள ஏனைய பணியாளர்களுடன் ஒப்பிடுகையில், அவர்கள் மிக அதிக ஊதியம் பெறுகின்றனர் என்றும், அவர்களது பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி, வேலை வாய்ப்புகள், கல்லூரியில் இட வசதி போன்ற பிற சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்றும் துணைவேந்தர் எடுத்துரைத்தார். எனினும், விடுதிச் சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர். மார்ச் திங்களில் வழங்கப்படும் பிப்ரவரித் திங்கள் சம்பளத்தை 1—3—1968 முதல் இந்நாள் வரை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால், எல்லாப் பணியாளர்களும், வேலையிலுள்ளனர். எப்போதும் போல் அவர்கள் தங்கள் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

இது குறித்துப் பல்கலைக் கழகமும், மாணவர் விடுதி அதிகாரிகளுந்தான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் அரசு எந்த வகையிலும் தலையிடுவதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்களும், திரு. கே. சகாதேவக் கண்டர் அவர்களும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர இருந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், அவர்கள் இருவரும் பேரவையில் இல்லாத காரணத்தினால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அடுத்து, திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(iv) நெல்லை மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரி வஜாவும், கடன் தவணை ஒத்திவைப்பும்

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொதுமுக்கியம் வாய்ந்த, கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

" திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, சாத்தான்குளம் வட்டங்களில் சென்ற 1374 பசலி முதல் நாளது 1376 பசலி முடிய பருவமழை பொய்த்துப் போய் விட்டதால் அப்பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக வரிவஜா, கடன் தவணை ஒத்திவைப்பு, பஞ்ச நிவாரண வேலை முதலியவற்றைத் துரிதமாகச் செய்ய வேண்டும்."

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததினால் பாதிக்கப்பட்டுள்ள சங்கரன்கோயில், தென்காசி, செங்கோட்டை, திருச்செந்தூர் வட்டங்களில் குடியானவர் செலுத்த வேண்டிய கடன் தவணை வசூல் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும், நிலவரி வசூல் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், இவ்வட்டங்களில் பஞ்சத்துயர் தணிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1967, அக்டோபர் திங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகவும் கடுமையாகவும் மழை பெய்தபோதிலும், சங்கரன் கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் வடகிழக்குப் பருவமழை ஓரளவு தவறிவிட்டது. மேற்சொன்ன வட்டங்களில் உள்ள ஏரிகளில் பாசனத்திற்கான நீர் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை. 1967, அக்கோபர், நவம்பர் திங்கள்களில் சிறிதளவு நீர் பெற்ற சில ஏரிகள்கூட வற்றிப் போயின. மழை